**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**Spl.CC.No.18/2025 - PW-29**

| | |
|---|---|
| Name | திரு.ராஜேந்திரன் |
| Father Name | ராமச்சந்திரன் |
| Village /Area | வேலூர் |
| Taluk | வேலூர் Taluk |
| Occupation | Pensioner |
| Age | 67 |
| Religion | HINDU |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 28.08.2025.

**(எதிரிகள் 3 முதல் 6,8,9,14 ஆஜர். எதிரிகள் 7,10 முதல் 13,15 ஆஜரில்லை BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை**

நான் 31.05.2016ம் தேதி வாலாஜா உதவி செயற்பொறியாளர் வேளாண்மை துறையில் உதவியாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்றேன். கடந்த 2010ஆம் வருடம் முதல் வாலாஜா உதவி செயற்பொறியாளர் வேளாண்மை துறையில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்தேன். அப்போது என்னுடைய பணி சம்பள பட்டியல், பயணபட்டியல் தயார் செய்வது மற்றும் சில்லறை செலவின பட்டியல் தயார் செய்வது மற்றும் Despatch Register பராமரிப்பது என்னுடைய பணி ஆகும். அதே துறையில் 1984லிருந்து 2009 வரை நான் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வந்தேன். நான் அலுவலக உதவியாளராக பணிபுரிந்த போது உதவி செயற்பொறியாளர் சொல்லும் வேலைகளை செய்வது என்னுடைய பணி ஆகும். உதவி செயற்பொறியாளர் சொன்னதன்படி பகிர்மான பதிவேட்டில் மானிய விலையில் பம்பு செட் வாங்க கொடுக்கப்பட்ட

விண்ணப்பங்களை நான் தான் பதிவு செய்தேன். அதன்பிறகு அவ்விண்ணப்பங்களை உதவியாளர் உமாராணி மற்றும் ரமேஷ் பெற்றுக்கொள்வார்கள். அந்த விண்ணப்பங்களில் உதவியாளர் ரமேஷ் மற்றும் உமாராணி ஆகியோர் முத்திரையிடுவார்கள். பகிர்மான பதிவேட்டில் பக்கம் எண் 205ல் 28.11.2007 முதல் பக்கம் 403ல் 31.03.2009 வரையிலான பதிவுகள் எங்கள் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டவை அதில் பெரும்பாலான பதிவுகள் என்னால் பதிவு செய்யப்பட்டவை ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை எதிரிகள் 3 முதல் 11, 13,14 தரப்பில் –**

நான் அலுவலக உதவியாளராக பணிபுரிந்த போது இளநிலை உதவியாளர் பணியிடம் காலியாக இருந்ததால் நான் உதவி செயற்பொறியாளர் உத்தரவுப்படி இளநிலை உதவியாளர் பணிகளை செய்தேன். அவரவர்கள், அவரவர்கள் பணியை செய்தார்கள் என்றால் சரிதான். மானிய விலையில் பம்பு செட்டுகள் கொடுப்பது சம்மந்தமாக எந்தவித தவறும் நடக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. முத்திரை போடும் வேலையை நான் செய்தது கிடையாது.

**குறுக்கு விசாரணை எதிரிகள் 12 மற்றும் 15 தரப்பில் –**

எதிரிகள் 3 முதல் 11, 13,14 தரப்பிலான குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக வழக்கறிஞர் தெரிவிக்கிறார்

**மறு விசாரணை –** இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

M SELVAM

Principal District Judge, Ranipet
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

Principal District and Sessions Judge,
Ranipet